விலை: 30.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 086 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 01 செவ்வாய்க்கிழமை (15.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார பின்னடைவு தொடர்பில்

### சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுடன் நிதி அமைச்சர் பசில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையே பேச்சுவார்த்தை ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார பின்னடைவு, நாணய கையிருப்பு மற்றும் பணவீக்கம் என்பனவற்றை நிவர்த்திக்கும் நோக்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய 15

இந்தியாவின் கைப்பாவையாக மாறியதோடு

## சீனா, அமெரிக்காவிடம் சரணடைந்துள்ளோம்

### ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

இலங்கை தற்போது ஒரு தோட்டாவை கூட எதிர்கொள்ளாமல் அமெரிக்காவுக்கு சரணடைந்துள்ளது. ஒரு வெடிகுண்டை கூட எதிர்கொள்ளாமல் சீனாவிடம் சரணடைந்துள்ளது. எவ்விதமான பயங்கரவாத செயல்களும் இன்றி இந்தியாவின் கைப்பாவையாக மாறியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. 15

## பேருந்துக் கட்டணம் இன்றுமுதல் உயர்வு

(கொழும்பு)

பேருந்துக் கட்டணம் இன்று முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

புதிய பேருந்துக் கட்டணத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (NTC) அறிவித்துள்ளது.

இதன்படி 17 ரூபாயாக இருந்த குறைந்தபட்ச கட்டணம் 20 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளது.

ஆயிரத்து 303 ரூபாயாக இருந்த அதிகபட்ச பேருந்துக் கட்டணம் ஆயிரத்து 498 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளதாக தேசிய 15

## ஜனாதிபதி - கூட்டமைப்பு இன்று சந்திப்பு

### சுமார் இரண்டு வருடங்களுக்குப் பின் கூட்டமைப்பை சந்திக்க கோட்டா நேரம் ஒதுக்கினார்

- வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலை
- தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை
- புதிய அரசியலமைப்பு

போன்ற பல்வேறு விடயங்கள் பேசப்படவுள்ளன.



ஜனாதிபதிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இன்று மாலை இடம் பெறவுள்ளதாக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்கான அழைப்பு தொடர்பில் கடந்த வாரம் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இலங்கை அரசாங்கத்தோடு 15

## இலங்கைக்கு சுற்றுலா செல்ல வேண்டாம்

### பிரித்தானியர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையினை கருத்தில் கொண்டு அங்கு செல்ல வேண்டாம் என்று இங்கிலாந்து அரசாங்கம் தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் தற்போது பொருளாதார நெருக்கடியினால், எரிபொருள் தட்டுப்பாடு, அத்தியாவசியப் 15



## நெருக்கடிகளை தீர்க்க அரசு தவறினால் மக்கள் நாட்டை இழக்க நேரிடும்

### முன்னாள் பிரதமர் ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் நெருக்கடிகளை தீர்க்க தேசிய அரசாங்கத்தை அமைப்பதில் எந்த பயனும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். 15

நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி நாளை உரையாற்றுவார்



03 ஆம் பக்கம் பார்க்க

பேனை, பென்சில் விலைகளும் அதிகரிப்பு



03 ஆம் பக்கம் பார்க்க

டொலர் இல்லை


மரணத்தின் விளிம்பில் இருக்கின்றோம்

அமைச்சர் மகிந்த அமரவீர

(11 ஆம் பக்கம் பார்க்க)

முதலீடுகளை மேற்கொள்ளுங்கள்

## சவுதி அரசாங்கத்துக்கு ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)

பல்வேறு துறைகளில் நேரடி முதலீடுகளை மேற்கொள்ளுமாறு சவுதி அரசுக்கு அழைப்பு விடுப்பதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள், அந்நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் இளவரசர் 15

## மாவட்டச் செயலகம் முன் போராட்டம்



(03 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜபக்ச அரசாங்கத்தை வீழ்த்த மாபெரும் எதிர்ப்புப் போராட்டம்

### மக்களுக்கு ஜே.வி.பி. அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து வீழ்த்துவதற்காக மக்கள் விடுதலை முன்னணி, பாரிய எதிர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இளைஞர்கள், உழவர்கள், 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பசில் அமெரிக்கா செல்லும் வரை போராட்டம் தொடரும்

## முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில அரசுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கை படுமோசமாக வீழ்ச்சியடைய காரணமாக இருந்த பசில் ராஜபக்ஷ அமெரிக்காவிற்கு திரும்பும்வரை போராட்டத்தை தொடரப் போவதாகவும் அவ்வாறு அவர் செல்லவில்லையாயின் விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில எச்சரித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர், "திட்டமிட்டு பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்யும் தந்திரம் காரணமாகவே தற்போது மக்கள் வரிசைகளில் நின்று கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இது ஏற்பட்ட நிலைமையல்ல. ஏற்படுத்தப்பட்ட நிலைமை.

இந்த நிலைமை ஏற்படக் காரணமாக இருந்த பசில் ராஜபக்ஷ என்ற அழகற்ற அமெரிக்கர் மீண்டும் அமெரிக்காவுக்கு செல்லும் வரை போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. அவர் திரும்பிச் செல்லவில்லை என்றால் விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு எதிராக உள்ளுக்குள் இருந்து நடத்திய போராட்டம் வெற்றி பெறவில்லை என்றாலும் எதிர்காலத்தில் இதற்கு எதிராக மக்களை அணிதிரட்டுவோம்.

இது ஆரம்பம் மாத்திரமே, இதன் காரணமாக நான் உள்ளிட்டோருக்கு எதிராக வழக்குகள் தொடரப்படலாம். சிறையில் அடைக்கப்படலாம், சில நேரம் கொலை செய்யப்படவும் கூடும். எம்மை கொலை செய்தாலும் எமது போராட்டத்தை அழிக்க இடமளிக்க மாட்டோம்.

டீசல் தட்டுப்பாடு ஏற்படும் என துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் கூறியதன் காரணமாகவே டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாக அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனது அறிவிப்பால், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டது என்றால், மருந்து, சீமெந்து, இரும்பு, எரிவாயு, பால் மா, கோதுமை மா ஆகியவற்றுக்கு எப்படி தட்டுப்பாடு ஏற்பட்டது என நான் அந்த அமைச்சர்களிடம் கேள்வி எழுப்புகிறேன்.

எரிபொருள் மற்றும் ஏனைய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட ஒரே காரணம் டொலர் பற்றாக்குறையே. கையிருப்பில் இருந்த குறைந்த தொகையான அந்நிய செலாவணியை உரிய முறையில் முகாமைத்துவம் செய்ய நிதியமைச்சர் தவறியதே டொலர் பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்தது. வேலை செய்ய தெரியாத பசிலின் இயலாமையை மறைக்க, எங்கள் மீது குற்றம் சுமத்த வேண்டாம் என நாங்கள் அரசாங்கத்திற்கு கூறுகிறோம்" என்றார். (ம)

## நாட்டில் நேற்றும் 345 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 345 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 656,041ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 20,758 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம)


யா/ஹாட்லிக் கல்லூரி
பருத்தித்துறை

தரம் 6 அனுமதி - 2022

கல்லூரிக்கு தரம் 6 (2022) வகுப்புகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை பாடசாலை நேரத்தின்போது அலுவலகத்தில் நேரடியாகவும் கல்லூரியின் இணையத் தளமான *www.hartley.lk* இலிருந்து தரவிறக்கம் செய்வதன் மூலமும் பெற்றுக்கொள்ள்லாம்.

விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி : 2022.03.31

- அதிபர்

(C-3968)



யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

தரம் 06 (2022) அனுமதி
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)

2022ம் வருடத்தின் தரம் 6 இற்கான தமிழ், ஆங்கில மொழி மூல விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 130க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் அலுவலக நேரத்தில் (8.30 - 1.30) விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி - 31.03.2022

(10635) - அதிபர்



பாராட்டி வாழ்த்துகின்றோம்

மகத்தான சாதனையைப் புரிந்த மாணவன்

தமிழ்ச்செல்வன் கஜலக்சன்
(198 புள்ளிகள்)

Best Wishes



அண்மையில் வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்ததுடன் இன்னும் பல சாதனைகளை நிகழ்த்த எல்லாம்வல்ல சரஸ்வதிதேவியின் அருட்கடாட்சம் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
கொக்குவில். (C-3972)



கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

மணவாளக்கோலத் திருவிழா

16.03.2022 புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி அம்பாளுக்கு 1008 சங்காபிடேகமும் பரிவாரமூர்த்திகளுக்கு விசேட அபிடேக ஆராதனைகளும் இடம்பெற்று அம்பாள் உள்வீதி, வெளி வீதியுலா வந்து அருள்பாலிப்பார்.

ஆலய பரிபாலன சபை,
கொக்குவில்.
(10634)





பாராட்டி
வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியை

திருமதி கஜேந்தினி நாகசீலன்
*(B.A.Hons, M.A Tamil, Dip in.Edu.)*

அவர்கள் 05.03.2022 அன்று நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (M.Ed) பட்டம் பெற்றுக் கொண்டமையை முன்னிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ஏழாலை மகா வித்தியாலயம்.
(10637)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை

திருமதி
ராதிகா துஷ்யந்தன்
B.A ( Sociology Special ), PGDE, M.Ed.

அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணிப் பட்டம்
M.Ed.(2nd Upper)
பெற்றமையை பாராட்டி
மேலும் பல சிறப்புகள் பெற்று
நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.
(10638)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மக்கள் அபிவிருத்தி திட்டங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை’

## மாவட்ட செயலகம் முன் ஈ.பி.டி.பி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மக்கள் அபிவிருத்தி திட்டங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்து ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் நேற்று திங்கட்கிழமை யாழ் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரச சுற்று நிருபங்களை முறையாக நடைமுறைப்படுத்து, மாவட்ட செயலகம் அரசியல் கட்சி அலுவலகமா?, மாவட்ட செயலாளரே அதிகாரியாக துணிந்து செயல்படுங்கள் போன்ற கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர். (4-5-33)



# நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

(கொழும்பு)

நாளை புதன்கிழமை நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றுவார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி மற்றும் அத்தியாவசிய பொருட்கள் விலையேற்றம் தட்டுப்பாடு என மக்கள் கடும் நெருக்கடியை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில் அதற்கான தீர்வு குறித்து நாட்டு மக்களிடத்தில் அவர் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-5)



# பொறியியலாளராக வந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்றுவேன்

## யாழில் முதலாம் இடம்பெற்ற மாணவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்காலத்தில் பொறியியலாளராக வந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்றுவேன் என 2021 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.கல்வி வலய ரீதியில் முதல் இடத்தினை பெற்றுக்கொண்ட யாழ் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் தமிழ்ச்செல்வன் கஜலக்சன் தெரிவித்துள்ளார்.

வெளியாகியுள்ள 2021 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு அடிப்படையில் யாழ்.கல்வி வலய ரீதியில் யாழ் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் தமிழ்ச்செல்வன் கஜலக்சன் முதலிடத்தை பெற்ற நிலையில் தனது சாதனை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



நான் சூம் வகுப்பினூடாகவே எனது படிப்பினை மேற்கொண்டேன். எனது அம்மா ஆசிரியர் அப்பா வியாபாரம் செய்கிறார்.

எனது அம்மா மற்றும் அப்பா ஊக்கமளித்ததன் காரணமாகவும் எனது பாடசாலையின் வகுப்பாசிரியர் மற்றும் எனது ஆசிரியர்களின் ஊக்கத்தின் காரணமாகவே இந்த வெற்றியைபெற முடிந்தது.

அத்தோடு எதிர்காலத்தில் நான் பொறியியலாளராக வந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்ற விரும்புகின்றேன் என தெரிவித்தார். (4-5-33-18)

# சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகை



(கொழும்பு)

சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் ஃபைஸல் பின் ஃபர்ஹான் நாட்டை வந்தடைந்தார்.

அவர் ஒருநாள் உத்தியோகப்பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு நேற்று திங்கட்கிழமை அதிகாலை 1.20 மணியளவில் கொழும்பை வந்தடைந்தார்.

அவருடன் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் 18 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# ஜனாதிபதியின் வீட்டுக்கு அருகில் மீட்கப்பட்ட ‘விளையாட்டு துப்பாக்கிகள்’

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்துக்கு அருகில் உள்ள எம்புல்தெனிய சந்தியிலிருந்து பெட்டியில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் இரு விளையட்டுத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

மிரிஹானை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்த இரு விளையாட்டுத் துப்பாக்கிகளும் மீட்கப்பட்டதாக மிரிஹானை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை இந்த இரு விளையாட்டுத் துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மிரிஹானை பொலிஸார் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்த நிலையில், அவ்விடத்தில் கடந்த 12 ஆம் திகதி இரவு நாடகம் ஒன்றின் படப்பிடிப்புகள் இடம்பெற்றுள்ளது.

அந்த படப்பிடிப்புக்கு எடுத்து வரப்பட்ட இரு விளையாட்டுத் துப்பாக்கிகளே தவறுதலாக அந்த நாட்டியக் குழுவினரால் மறந்து கைவிடப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (நி-5)

# பேனை, பென்சில் விலைகளும் அதிகரிப்பு

(கொழும்பு)

பேனை மற்றும் பென்சில் ஆகியவற்றின் விலைகள் 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதன் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றத்தின் அடிப்படையில், பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணத்தை, அதிகரிக்கவுள்ளதாக மாவட்ட பாடசாலை போக்குவரத்து சேவையின் தலைவர் ஹரிஸ்சந்திர பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

பிரதான நகரங்களில் 80 கிலோமீற்றர் தூரத்திற்கான சேவைக்கு, மாதாந்தம் தற்போது அறவிடப்படும் தொகைக்கு மேலதிகமாக 1,000 ரூபாய் அறவிடப்படும்.

கிராம புறங்களில் 10 கிலோமீற்றர் தூரத்திற்கு 200 முதல் 300 ரூபாய் வரையில் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# பயங்கரவாதத் தடை திருத்த சட்ட மூலம் பாராளுமன்றில்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடை (திருத்தம்) சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சு சார் ஆலோசனைக் குழு இணங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் குறித்த குழு கூடிய நிலையில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர் பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சட்டமூலம் கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் முதலாவது வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது. இதனை அடுத்து உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு அமைவாக திருத்தங்களை உள்ளடக்கிய சட்ட மூலம், அமைச்சுசார் ஆலோச னைக் குழுவில் அங்கீகரிக்க ப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் வாரத்தில் இரண்டாம் வாசிப்புக்காக பாராளுமன்ற த்தில் சமர்ப்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இண்டியன் வெல்ஸ் டென்னிஸ் நயோமி ஒசாகா தோல்வி




கலிபோர்னியாவில் நடைபெற்று வரும் இண்டியன் வெல்ஸ் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் பங்குபற்றிய நயோமி ஒசாகா முற்றிலும் எதிர்பாராதவிதமாக 2 ஆம் சுற்றில் தோல்வி அடைந்து வெளியேறினார்.

நான்கு தடவைகள் மாபெரும் டென்னிஸ் (கிராண்ட் ஸ்லாம்) போட்டிகளில் சம்பியனான ஒசாகா, கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 3 ஆம் சுற்று மகளிர் ஒற்றையர் போட்டியில் ரஷ்ய வீராங்கனை வெரோனிக்கா கியூடர்மெட்டோவாவிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

ஒசாகாவை பிரமிக்கச் செய்யும் வகையில் முதலாவது செட்டில் அற்புதமாக விளையாடிய கியூடர்மெட்டோவா ஒரு புள்ளியைத் தானும் விட்டுக் கொடுக்காமல் 6 - 0 என்ற புள்ளிகள் அடிப்படையில் மிக இலகுவாக வெற்றி பெற்றார்.

இரண்டாவது செட்டில் ஒசாகாவிடம் சிறிய சவாலை எதிர்கொண்ட கியூடர்மெட்டோவா ஆட்டத்தின் பிற்பகுதியில் மிகத் திறமையாக விளையாடி 6 - 4 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று ஒசாகாவை வெளியேற்றி 4 ஆம் சுற்றுக்கு முன்னேறினார்.

கடந்த ஒரு வருடத்தில் மகளிருக்கான ஒற்றையர் டென்னிஸ் தரவரிசையில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒசாகா தரவரிசையில் 78 ஆம் நிலையில் இருந்தவாறு இண்டியன் வெல்ஸ் போட்டியில் கியூடர் மெட்டோவாவை எதிர்கொண்டார்.

அப்போட்டியில் தோல்வி அடைந்த ஒசாகா தரவரிசையில் மேலும் பின்னோக்கி செல்லவுள்ளார்.

இந்தத் தோல்வியுடன் இண்டியன் வெல்ஸில் நடைபெற்றுவரும் மகளிர் டென்னிஸ் சங்க மற்றும் தொழில்சார் டென்னிஸ் சங்க சுற்றுப் போட்டி மற்றொரு பிரபல வீராங்கனையை இழந்துள்ளது.

இந்த சுற்றுப் போட்டியில் தரவரிசையில் 3 ஆம் நிலை வீராங்கனையாக பங்குபற்றிய பெலாரசின் அரினா சபாலென்கா முதல் சுற்றிலேயே தோல்வி அடைந்து வெளியேறியிருந்தார். (4-6)

# டெஸ்ட் கிரிக்கெட்டில் பும்ரா புதிய சாதனை



இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையேயான பகலிரவு டெஸ்ட் போட்டி பெங்களூரில் நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பும்ரா இந்திய மண்ணில் முதல் முறையாக 5 விக்கெட்டை எடுத்தார். தன் 29 ஆவது டெஸ்டில் அவர் 8 ஆவது முறையாக 5 விக்கெட்டை கைப்பற்றி உள்ளார்.

அவர் இதற்கு முன்னதாக மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் தலா 2 முறையும், அவுஸ்திரேலியா, இந்தியாவில் ஒரு முறையும் அவர் 5 விக்கெட்டை எடுத்துள்ளார்.

இதற்கு முன்பு இந்திய அணியின் முன்னாள் ஒல்ரவுண்டர் கபில்தேவ், 29 டெஸ்ட்களில் 8 முறை 5 விக்கெட்டுகளை எடுத்து இருந்தார்.

இதன்மூலம் அவரது சாதனையை பும்ரா சமன் செய்தார். இந்திய மண்ணில் முதல் முறையாக 5 விக்கெட் கைப்பற்றியது மகிழ்ச்சி அளிப்பதாக பும்ரா கூறினார். (4-6)




யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் தலைவர் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2 ஆவது போட்டியில் புத்தூர் எவரெஸ்ட் அணியை எதிர்த்து பாடும்மீன் அணி மோதியது. இப்போட்டியில் 6-0 என்ற கோல்கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது. (படம்:- ஏனெஸ்ற்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2534

### பவதா


ஏதோ ஒன்றின் மீது வைக்கப்பட்ட முழுமையான நம்பிக்கை உடைபடும் போது தான்...



இனி எதுவுமே தேவையில்லை என்ற நிலைக்கு வந்து விடுகிறது மனித மனம்........

### திலீபன்

சிலரை தொலை தூரத்தில் விட்டாய்
சிலரை தொலைத்துவிட்டாய்
உனக்கு ஏற்ற பெயர் தான்
(தொலை)பேசி



### அனுஷ்கா

எவன் ஒருவன் பெண்களை மதிக்குறானோ!



அவன் Single ஆக தான் இருப்பான்...!

### வைஷ்ணவன்



நான்கு மனிதர்களிடம் காணப்படாத நன்றியுணர்வு! நான்கு பிஸ்கட் துண்டுகளில் நாயிடம் கிடைத்துவிடுகிறது...

### துளசி

இந்து சமுத்திரத்தின் முத்து என்று அழைக்கப்படும் நாடு இலங்கை ஆகும்...



முத்து எல்லாம் வித்து நிறைய நாள் ஆச்சு தம்பி

### சிந்துஜன்

மனைவி: "என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போகிறீங்க??"



கணவன்: "டாக்டர் சுகர் இருக்கான்னு அடிக்கடி செக் பண்ணிக்க சொன்னார் அதான்.."

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி குறியீட்டு இல :- எழுதுநர் 302/14**

சம்பள அளவுத்திட்டம் :- 15560-135X10-145X10-18760 (04/2018 இற்கு அமைய

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்/கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**அல்லது**

க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**2. பதவி குறியீட்டு இல :- உற்பத்தி முகாமையாளர் 107/11**

சம்பள அளவுத்திட்டம் :- 17190-170X10-185X10-20740 (04/2018 இற்கு அமைய

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில்/உற்பத்தி/சந்தைப்படுத்தல்/பொருள் விநியோகமும் பங்கீடும்/ பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் மேற்பார்வை நிலைப் பதவி ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

க.பொ.த.உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிகப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி :- 31.03.2022**

**நிபந்தனைகள்**

1. பதவிக்கேற்ப பிணைப்பணம் அறவிடப்படும்.
2. வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டது).
3. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்படும்.
4. கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
5. சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தேசிய அ.அ.இல, பிறந்த திகதி, தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச்சான்றிதழ் பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
7. விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.
8. விண்ணப்பங்கள் தலைவர் பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி பளை எனும் முகவரிக்கு எதிர்வரும் 31.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
9. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

க.இராசதுரை
தலைவர்,
பளை.ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

(C-3967)

# உக்ரைன் மக்களை விட பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்கள்

(ஹற்றன்)

தற்போது குடும்ப ஆட்சி நடந்து கொண்டிருக்கும் இலங்கையில் தேசிய அரசு என்பது சாத்தியப்படாத விடயம். அதனால்தான் விமல், கம்மன்பில போன்றவர்கள் வெளியேறியுள்ளனர் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, நாட்டில் ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து, டொலரின் பெறுமதி அதிகரித்து வருவதால் நாளாந்தம் பொருட்களின் விலை உயர்வடைகின்றன. இதனால் நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு, போக்குவரத்துறைகூட ஸ்தம்பித்துள்ள நிலை. அதுமட்டுமல்ல சமையல் எரிவாயு உள்ளிட்ட பொருட்களை வாங்க வரிசையில் காத்திருக்க வேண்டிய பேரவலம் வேறு.

எனினும், நாட்டை மீட்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்கு அரசு, நிபுணர்களின் ஆலோசனைகளை உள்வாங்கவில்லை. அது தொடர்பில் ஆட்சியாளர்கள் அலட்டிக்கொள்ளமாட்டார்கள். எனவே, இந்த அரசை விரட்டியடித்தால்தான் நாட்டு மக்களுக்கு விமோசனம் கிட்டும்.

போர் நடைபெறும் உக்ரைனில் வாழும் மக்களைவிட, இலங்கைவாழ் மக்கள் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தோட்டத்தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமைமா கிடைக்குமா? என்பது சந்தேகமே என அவர் தெரிவித்தார். (நி)

# விண்ணவரோடு மகிழ்ந்து 2 ஆண்டுகள்

15.03.2022

அமரர் .திரு. **அருளானந்தம் விமலசேகரன் பேனாட்**



**அன்னை மடியில் : 1959.08.06**

**ஆண்டவன் அடியில்: 2020.03.15**

"உயிர்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர்கள் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11 : 25)

(No.60/1A, SOLOMANS LANE, OLD PARK CHUNDIKULI, JAFFNA)
Former staff M.N.SHANTHI CO (PVT) LTD COLOMBO-01,
(OLD BOY ST.PATRICKS COLLEGE JAFFNA)

தகவல் குடும்பத்தினர்
"Daisy Kudil",
104/18A, Sangamita MW,
KOTAHENA,
COLOMBO-13.

133, MATHAVADY
ERALALAI, NORTH
ERALALAI,
JAFFNA.

(10601)

# இராசிபலன்

15.03.2022
பங்குனி 01, செவ்வாய்க்கிழமை
துவாதசி பிற்பகல் 11.48.மணிவரை

ஆயில்யம் முன்னிரவு 11.28 மணிவரை
சுபநேரம் - 10.51- 12.21 மணிவரை
இராகுகாலம் -3.21-4.51 மணிவரை

பிரதோஷ விரதம்,
சந்திராஷ்டமம்- பூராடம், உத்தராடம்.

**வளவன்**




ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும்.




விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாடுகளை நிறைவேற்ற வேண்டிய நாள், பயணங்கள் மூலம் சுப செய்திகள் கிடைக்கலாம், கற்பனை மிகுதியான நாள்.




செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை ஏற்படலாம், சயனச்சுகக் குறைவான நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, விருந்தினர் வருகையுண்டு, பயணங்கள் கைகூடும்.




தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், உறவினர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.




கடினமான வேலைகளைக்கூட நயமாகப் பேசி முடித்துக்கொள்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை, மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.




பாராட்டும் புகழும் கூடும் நாள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தன்னையே கொல்லும் சினம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாதுகாப்புப் பற்றி நாமே வரைவோம் சித்திரப்போட்டி

## பரிசில் பெறுவோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

**தீவக கல்வி வலயம்**

முதலாம் இடம்- அ.யஷ்வினி-யா/வந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை, இரண்டாம் இடம்-ச.சிவதரன்-யா/புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம், மூன்றாம் இடம்-இ.சாதனா -யா/கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்.

**யாழ்ப்பாண கல்வி வலயம்**

முதலாம் இடம்- ரா.சஞ்ஜனா- யா/திருக் குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை, இரண்டாம் இடம்-ம.லின்சிகா-யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம், மூன்றாம் இடம்- பி.உதிஸ்ரன்- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

**கிளிநொச்சி மாவட்டம் - தெற்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-கே.கேதாரகன்-கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்.

**வவுனியா மாவட்டம் - வடக்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-சதாசிவம் டிலக்சன்-வ/சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலை, இரண்டாம் இடம்-ந.பவிசாலினி- வ/சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலை.

**வவுனியா மாவட்டம் - தெற்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-க. விஸ்ணுகா-வ/வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், இரண்டாம் இடம்-பி.நிலுக்ஷியகா-வ/வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், மூன்றாம் இடம் இ.கவீன்- வ/வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்.

**முல்லைத்தீவு மாவட்டம்- துணுக்காய் கல்வி வலயம்**

முதலாம் இடம்-இ.ஷகீத்தன்-மு/மாமடு பழம்பாசி அ.த.க. பாடசாலை.

**முல்லைத்தீவு மாவட்டம்- முல்லைத்தீவு கல்வி வலயம்**

முதலாம் இடம்-சி.டிசானி-மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, இரண்டாம் இடம்-ஆதித் ஜெயகாந்தன்- மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம், மூன்றாம் இடம்-லி.சஜத்-மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

**மன்னார் மாவட்டம்-மன்னார் கல்வி வலயம்**

முதலாம் இடம்- உ.வைஷ்ணவி-மன்/பரிகாரி கண்டல் அ.த.க.பாடசாலை, இரண்டாம் இடம்-ஜெ.அனுராதிகா-மன்/பரிகாரி கண்டல் அ.த.க.பாடசாலை, மூன்றாம் இடம்-S F ஹபீஸா-மன்/அல்/அஸ்கார் மகா வித்தியாலயம்.

**கல்வி வலய ரீதியாக பரிசில் பெறுபவர் விபரம்**

**பிரிவு 12-14**
**யாழ்.மாவட்டம்- வடமராட்சி கல்வி வலயம்**

முதலாம் இடம்-பா.கோநிலவன்-யா/ஹாட்லி கல்லூரி, இரண்டாம் இடம்-தி.சஹானா -யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம்- தி.முகிலன்-யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

**வலிகாமம் கல்வி வலயம்**

முதலாம் இடம்-அன்ரன் கிரேசியன் மக்மிலன்-யா/மகாஜனா கல்லூரி, இரண்டாம் இடம்- சு.றிசானா யா/நடேஸ்வரா கல்லூரி, மூன்றாம் இடம்-ந.விஸ்ணு-யா/சுதுமலை சின்மயபாரதி.

**தென்மராட்சி கல்வி வலயம்**

முதலாம் இடம்-செ.அனலரசன்- நவீல்ட் பாடசாலை கைதடி, இரண்டாம் இடம்- சி.ஆர்த்தி-நவீல்ட் பாடசாலை கைதடி, மூன்றாம் இடம்- வ.சிந்துரிகா-நவீல்ட் பாடசாலை கைதடி.

**தீவக கல்வி வலயம்**

முதலாம் இடம்-மு.டிசாழினி-யா/ஊர் புனித மரியாள் றோ.க.ம. வித்தியாலயம், இரண்டாம் இடம்-ஜோ.நிதர்சனா-யா/ஊர் புனித மரியாள் றோ.க.ம.வித்தியாலயம், மூன்றாம் இடம்-ம.யசீபன்- யா/காரைநகர் இந்துக் கல்லூரி.

**யாழ்ப்பாண கல்வி வலயம்**

முதலாம் இடம்-சு.ரதிகா-யா/இந்து மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம்-அரவிந்தன் மரியோ மில்ஷான்-யா/சென் ஜோன்ஸ் கல்லூரி, மூன்றாம் இடம்-ச.விஷ்வதுளசி- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், மூன்றாம் இடம்-சு.பிரவினா- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

**கிளிநொச்சி மாவட்டம் - வடக்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-அ.அகல் நிலவன்-கிளி/பரந்தன் இந்து ம.வித்தியாலயம், இரண்டாம் இடம்-அ.நிதுசன்-கிளி/பரந்தன் இந்து ம.வித்தியாலயம், மூன்றாம் இடம்- சு.ஆரூரன்-கிளி/பரந்தன் இந்து ம. வித்தியாலயம்.

**கிளிநொச்சி மாவட்டம் - தெற்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-ம.சந்துரு- கிளி/ திருவையாறு மகாவித்தியாலயம், இர ண்டாம் இடம்- லெ.வீதுசன்-கிளி/திருவையாறு மகாவித்தியாலயம், மூன்றாம் இடம்- ம.அச்சுதன்- கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்.

**வவுனியா மாவட்டம் - வடக்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-ந.மிதுசிகன்-வ/சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை, இரண்டாம் இடம்-தி.யாதுர்சா-வ/சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை, மூன்றாம் இடம்-பொ.கேதீஸ்வரி- வ/சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை.

**வவுனியா மாவட்டம் - தெற்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-வி.ஜெவ்ரின்-வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்-சீ.பாத்திமா- வவுனியா அல்ஹமியா மகா வித்தியாலயம், மூன்றாம் இடம்-ஆர்.பாத்திமா நிஜா- வவுனியா அல்ஹமியா மகா வித்தியாலயம்.

**முல்லைத்தீவு மாவட்டம்- துணக்காய் கல்வி வலயம்**

முதலாம் இடம்-இ.கோபிகா-மு/பாலிநகர் ம.வித்தியாலயம், இரண்டாம் இடம்-த.நயவிழி-மு/பாலிநகர் ம.வித்தியாலயம், மூன்றாம் இடம்-லோ.கல்விச்சுடர்-மு/ஒட்டுசுட்டான் ம. வித்தியாலயம்.

**முல்லைத்தீவு மாவட்டம்- முல்லைத்தீவு கல்வி வலயம்**

முதலாம் இடம்-வி.கிருஷாலினி மு/பண்டாரவன்னியன் மகாவித்தியாலயம்.

**மன்னார் மாவட்டம் - மன்னார் கல்வி வலயம்**

முதலாம் இடம்-எம்.டி.எவ்.சகானா-மன்/அல்/அஸ்கார் மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்- ஏ.எவ்.அஸீரா-மன்/அல்/அஸ்கார் மகா வித்தியாலயம், மூன்றாம் இடம்-எம்.எவ்.சுமையா- மன்/அல்/அஸ்கார் மகா வித்தியாலயம்.

**கல்வி வலய ரீதியாக பரிசில் பெறுபவர் விபரம்**

**பிரிவு 15-16**
**யாழ்.மாவட்டம்- வடமராட்சி கல்வி வலயம்**

முதலாம் இடம்- கே.சைந்தன்- யா/நெல்லியடி மத்திய கல்லூரி, இரண்டாம் இடம்-மு.றெஜினாஸ்-யா/வதிரி இருதய கல்லூரி, மூன்றாம் இடம் க.கேசிகன் - யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்.

**வலிகாமம் கல்வி வலயம்**

முதலாம் இடம்-அ.சுபா-யா/நடேஸ்வரா கல்லூரி, இரண்டாம் இடம்-நி.நமிதா-யா/நடேஸ்வரா கல்லூரி, மூன்றாம் இடம்-ம.மகிழ்ராஜ்-யா/சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்.

**தென்மராட்சி கல்வி வலயம்**

முதலாம் இடம்-ர.ருக்ஷிதன்-யா/நவீல்ட் பாடசாலை கைதடி, இரண்டாம் இடம்-சி.மகீசன்-யா/நவீல்ட் பாடசாலை கைதடி, மூன்றாம் இடம்-கொ.அனுசா-யா/நவீல்ட் பாடசாலை கைதடி.

**தீவக கல்வி வலயம்**

முதலாம் இடம்-ப.சுதர்ஜனன்-யா/காரைநகர் இந்து கல்லூரி, இரண்டாம் இடம்-ஜோ.கிர்த்திகா-யா/ஊர் புனித மரியாள் றோ.க.ம.வித்தியாலயம், மூன்றாம் இடம்-சூ.மைதிலி-யா/ஊர் புனித மரியாள் றோ.க.ம.வித்தியாலயம்.

**யாழ்ப்பாண கல்வி வலயம்**

முதலாம் இடம்-சீ.கனிஜீவனா-யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம்-பீ.நிலுஷா- யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை, மூன்றாம் இடம்-ம.கனிவர்ணன்-யா/இந்துக் கல்லூரி, மூன்றாம் இடம்-கி.கீர்த்தனா - யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை.

**கிளிநொச்சி மாவட்டம் - வடக்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-ரி.பிருந்தா-கிளி/விவேகானந்தா வித்தியாலயம்.

**கிளிநொச்சி மாவட்டம் - தெற்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-ச.ரணயன்-கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்-அ.தேனுயன்-கிளி/திருவையாறு மகா வித்தியாலயம், மூன்றாம் இடம்- ஸ்ரெபின் திலிபன் தபுஷா- கிளி/இராமநாதபுரம் ம.வித்தியாலயம்

**வவுனியா மாவட்டம் - வடக்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்-யோ.டிசாந்-வ/மதியமடு விவேகானந்தா வித்தியாலயம், இரண்டாம் இடம்-ஜெ.கிரிதாஸ்-வ/மதியமடு விவேகானந்தா வித்தியாலயம், மூன்றாம் இடம்-ந.டிசான்- வ/சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை.

**வவுனியா மாவட்டம் - தெற்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்- ஏ.ஆர்.சால் அஹமட்-வ/அல் ஹாமியா மகா வித்தியாலயம், இரண்டாம் இடம்-டோ.பஸ்மியா-வ/அல் ஹாமியா மகா வித்தியாலயம், மூன்றாம் இடம்-இ.பரத்-வ/வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயம்.

**முல்லைத்தீவு மாவட்டம்- முல்லைத்தீவு கல்வி வலயம்**

முதலாம் இடம்-தா.சாருஜன்-மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

**மன்னார் மாவட்டம்-மன்னார் கல்வி வலயம்**

முதலாம் இடம்-வி.டினி-மன்/பரிகாரி கண்டல் அ.த.க.பாடசாலை, இரண்டாம் இடம்-தேவராசா அனோஜ் அமல்நாத்-மன்/பரிகாரி கண்டல் அ.த.க.பாடசாலை, மூன்றாம் இடம்-அன்ரன் பிறிக்காட் கிங்சன் செமின்ரன்-மன்/பரிகாரி கண்டல் அ.த.க.பாடசாலை.

(முற்றும்)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு ஒருபோதும் அனுமதி இல்லை

## கடற்றொழில் கூட்டுறவு சங்க சமாசம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடல் பரப்புக்குள் இந்திய மீனவர்களின் இழுவை மடித் தொழிலுக்கு ஒரு நிமிடம் கூட அனுமதி வழங்க முடியாதென இந்திய மீனவர்களிடம் தெரிவித்துள்ளதாக, யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய-இலங்கை மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் சிநேகபூர்வமான கலந்துரையாடலொன்று கடந்த 11 ஆம் திகதி கச்சதீவில் நடைபெற்றது.

இதில் நாம் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக மட்டுமே போராடி வருகின்றோம். ஆனால் அதை, இந்திய தொப்புள் கொடி உறவுகளுக்கு எதிரான போராட்டமாக சிலர் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் கதைத்து வருகின்றனர்.

நாம் அங்கே தெளிவாக கூறினோம், 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆண்டு வரை வடக்கு மக்களுக்கு, இந்திய உறவுகள் செய்த உதவிகளை நாம் மறக்க மாட்டோம். ஆனால் ஒரு நிமிடம் கூட இலங்கை கடல் பரப்புக்குள் இழுவை. மடித் தொழிலை செய்ய அனுமதிக்க மாட்டோம். நாட்டுப்படகோ, இழுவை மடிப்படகோ எதுவாக இருந்தாலும் எமது நாட்டு கடற் பகுதிக்குள் அத்துமீறி வரும் பொழுது சட்டம் தன் கடமையை செய்யும்.

இந்திய மீனவர்கள் இழுவை மடி தொழிலை நிறுத் தினால் உங்கள் தரப்பிலுள்ள நியாயமான கோரிக்கைகளை நாம் வெளியுறவு அமைச்சின் ஊடாக ஆராய்வோம் என கூறியி ருந்தோம் என தெரிவித்தார். (4-5-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடதாசிகளுக்கு தட்டுப்பாடு

# பரீட்சை நடத்துவதில் சிக்கல்

## பரீட்சைத்திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

**கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையை நடத்துவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.**



கடதாசிகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் அவற்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவிருந்த சாதாரணதரப் பரீட்சையை கொரோனாத் தொற்று காரணமாக மே மாதம் 23 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பரீட்சையில் சுமார் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ,மாணவியர் தோற்றவுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற உயர்தரப்பரீட்சையின்போதும் பரீட்சைகள் திணைக்களத்திடம் போதியளவு கடதாசிகள் கையிருப்பில் இருக்கவில்லை எனவும், அரச அச்சக கூட்டுத்தாபனத்திடம் கடதாசி பெற்றுக் கொண்டே பரீட்சை வினாத் தாள்கள் அச்சிடப்பட்டதாக தெரிவித்தது. (நி)

# அமைச்சின் சொத்துக்களை கையளித்த அமைச்சர் வாசு தேவ



(கொழும்பு)

நீர் விநியோகத்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, தமது உத்தியோக பூர்வ வீட்டையும் வாகனங்களையும் அமைச்சின் செயலாளரிடம் கையளித்துள்ளார்.

அமைச்சு பணிகளில் இருந்து ஒதுங்கி இருக்கவும், அமைச்சரவைக் கூட்டங்களிலும் கலந்துக்கொள்வதில்லை என முடிவு செய்திருந்த நிலையில், அமைச்சருக்கான சிறப்புரிமைகளை அனுபவிப்பது நியாயமற்ற செயல் என்று உணர்ந்ததன் காரணமாக அவற்றை திரும்ப ஒப்படைத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சு பதவிகளில் இருந்து நீக்க ஜனாதிபதி அண்மையில் எடுத்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, அமைச்சு பணிகளில் இருந்து விலகிக்கொண்டதுடன் அமைச்சரவைக் கூட்டங்களிலும் கலந்து கொள்வதில்லை எனத் தீர்மானித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# குளவி கொட்டியதில்

## 60 மாணவர்கள் மருத்துவமனையில்

(மொனராகலை)

மொனராகலை -எத்திமலே பகுதியில் பாடசாலையொன்றில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 60 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி-5)


# மணி விழா வாழ்த்து

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர்

திருமதி. சகுந்தலா ஜெயசீலன்

அவர்கள்
2022.03.15 இன்று
மணிவிழா நாயகியாக
பெருமை பெறுகிறார்.
இனிவரும் புத்தகவைகளும்
புத்தெழில் கொண்டு
சீரும் சிறப்போடு அனைத்து
நலன்களையும் பெற்று
இவர் பல்லாண்டு
வாழ இறையருள்
வேண்டி மனதார
வாழ்த்துகிறோம்.




(10618)

ஆசிரியர் கழகமும் பாடசாலைச் சமூகமும்
யா/தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: சூரி, செவ் 10 இல் உயரம் :5'5"<br>தகைமை/தொழில்:உயர்தரம் பிரான்ஸில் இருந்து வந்தவர்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12409 | பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா: 5 ½ சூரி, செவ் 10 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: AL<br>எதிர்பார்ப்பு: இந்தியாவில் திருமணம் முடித்து சென்றவர் தொடர்பு இல்லை விவாகரத்தும் ஏற்கப்படும்.<br>தொ.இ:G/12474 |
| பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 40 ½ சூரி 10 செவ் 1 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: இந்திய பல்கலைக் கழகத்தில் பொறியியல்துறை பயின்று முடிக்கவில்லை. லண்டனில் சொந்த வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: குறைந்தது உயர்தரம் ஆங்கில அறிவு<br>தொ.இ: B/12410 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: சூரி 11 செவ் 9 இல் உயரம்: 5' 10"<br>தகைமை/தொழில்:வைத்தியர் ஆயுள்வேதம்<br>எதிர்பார்ப்பு: படித்தநல்ல வேலையிலுள்ள உள்நாடு அல்லது வெளிநாட்டு மாப்பிள்ளை<br>தொ.இ:G/12475 |
| பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா :32 ½ சூரி 6 செவ் 5 இல்<br>உயரம்: 175 cm<br>தகைமை/தொழில்:Security Engineer ஜேர்மன்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (ஜேர்மன்)<br>தொ.இ: B/12411 | பிறப்பு:1989 இந்து நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: சூரி, செவ் 6 இல்<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி வெளிநாடு ஆயின் லண்டன், அவுஸ்ரேலியா, கனடா.<br>தொ.இ:G/12477 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா:17 ½ சூரி 4 செவ் 7 இல்<br>உயரம்: 5' 10"<br>தகைமை/தொழில்: Q.S (T.O)<br>எதிர்பார்ப்பு: படித்த அரச-தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12412 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: சூரி 2 செவ் 9 இல்<br>உயரம்: 150 cm<br>தகைமை/தொழில்:B.com கனடா PR<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி.<br>தொ.இ:G/12478 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# உக்ரைன் மீது ரஷ்யா குண்டு மழை! இராணுவ பயிற்சித் தளம் மீது வான்தாக்குதல்

## 35 பேர் உயிரிழப்பு 134 பேர் படுகாயம்



(கீவ்)

உக்ரைனின் யவோரிவ் நகரில் உள்ள இராணுவப் பயிற்சி தளத்தின் மீது ரஷ்யான நடத்திய வான்வெளி தாக்குதலில், இதுவரை 35 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 134 பேர் படுகாயமடைந்துள்ளனர் என உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைனின் மேற்குப் பகுதி நகரங்கள் மீது ரஷ்யா கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், போலந்து எல்லையில் இருந்து 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மேற்கு உக்ரைனின் யவோரிவ் நகர் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில், பல குடியிருப்பு கட்டடங்கள் இடிந்து சேதமடைந்துள்ளன. (நி)

# நேட்ட...

# ரஷ்ய...

## உக்ரைன்...

(கீவ்)

**நேட்டோ உறுப்பு நா... ஜனாதிபதி ஜெலன்ஸ்கி...**

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாடு மீது ரஷ்யா போர் தொடுத்து உள்ளது.

முக்கிய நகரங்களை குண்டு

# உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்க தூதரகத்தில் ஒளிர்ந்த வர்ண விளக்குகள்




(டில்லி)

சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகம் உக்ரைன் தேசிய கொடியை பிரதிபலிக்கும் வண்ண விளக்குகளை ஒளிரவிட்டுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையே நடைபெறும் போர் மூன்று வாரங்களுக்கு மேலாக தொடர்கிறது. நேட்டோ அமைப்பில் உக்ரைன் உறுப்பினராவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது.

போரை நிறுத்த வேண்டும் என்று ரஷ்யாவுக்கு அமெரிக்கா கடும் கண்டனத்தை தெரிவித்துவருகிறது. ரஷ்யாவின் மீது அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது.

உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கி அமெரிக்கா உதவி செய்துவருகிறது. இருப்பினும், உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா நேரடியாக போரில் ஈடுபடவில்லை. இருந்தாலும் உக்ரைனுக்கு ஆதரவாக ரஷ்யாவுக்கு அமெரிக்கா கடும் கண்டனங்களைத் தெரிவித்துவருகிறது.

இந்நிலையில் அதன் ஒரு பகுதியாக சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் உக்ரைன் தேசிய கொடியை பிரதிபலிக்கும் வண்ண விளக்குகளை ஒளிரவிட்டுள்ளது.


இதுகுறித்த அமெரிக்க தூதரகத்தின் டுவிட்டர் பதிவில், 'இந்தியாவின் அமெரிக்க தூதரகம் உக்ரையிய கொடியின் வண்ணங்கள் ஒளிர ஆதரவாக நிற்கிறோம். உக்ரைனின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பு உறுதியானது' என்று தெரிவித்துள்ளது.(நி-5)

# யானைகள் தினம் தாய்லாந்தில் விமரிசை

(தாய்பே)

தாய்லாந்தில் சோன்புரி மாகாணத்தில் உள்ள தோட்டத்தில் பராமரிக்கப்படும் 57 யானைகளுக்கு யானைகள் தினத்தை முன்னிட்டு இரண்டு தொன் காய்கறிகள் மற்றும் பழங்களுடன் விருந்து பரிமாறப்பட்டது.

அவற்றை யானைகள் ருசித்து உண்டன. தர்பூசணி போன்ற பழங்களை யானைகள் சுவைத்த காட்சியை பலர் ஆர்வமாக கண்டுகளித்தனர். (நி-5)



# ரஷ்யாவுக்கு உதவினால் சீனாவுக்கும் பொருளாதார தடை

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ரஷ்யாவுக்கு உதவினால் சீனாவும் பொருளாதார தடை உள்ளிட்ட கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.உக்ரைன் மீதான போர் காரணமாக, ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளை உலக நாடுகள் விதித்துள்ளன.

இந்த நிலையில், இத்தாலி தலைநகர் ரோமில் வைத்து சீனாவின் தூதரக உயர்மட்ட அதிகாரி யாங் ஜீச்சியை சந்தித்த அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

பொருளாதார தடைகளில் இருந்து மீள்வதற்கு ரஷ்யாவுக்கு சீனா உதவி செய்தால் உலக நாடுகளில் இருந்து தனித்து விடப்படும் எனவும் அவ... எச்சரிக்கை விடுத்தார்.

சீனாவிடம் ஆயுதங்கள் வழங்குமாறு ரஷ்யா கேட்... ருந்த நிலையில், இந்த வி... காரத்தில் சீனா, ரஷ்யா பக்க... இருப்பது, பொருளாதாரம் ம... றும் தொழில்நுட்பம் சார்ந்... தடைகளை சந்திக்... வழிவகுக்கும் என அமெரிக்... உள்ளிட்ட நாடுகள் சீனாவுக்... தெளிவுபடுத்தியுள்ளன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்டோ நாடுகளையும் யா தாக்கலாம்!

## ன் ஜனாதிபதி எச்சரிக்கை

**நாடுகளை ரஷ்ய படைகள் தாக்கலாம் என உக்ரைன் ஸ்கி எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



களை வீசி தகர்த்து வருகிறது. நேட்டோ அமைப்பில் சேரும் முடிவை தாங்கள் கைவிட்டு விட்டதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அறிவித்து விட்ட போதிலும் ரஷ்யா தாக்குதலை நிறுத்தவில்லை.

இந்தநிலையில் போலந்து எல்லை அருகே உள்ள உக்ரைன் இராணுவத் தளம் மீது ரஷ்யா விமான தாக்குதலை நடத்தியது.

இந்தநிலையில் போலந்து எல்லை அருகே ரஷ்யா தாக்குதல் நடத்தியதால் நேட்டோ அமைப்புக்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

நீங்கள் எங்கள் வான் எல்லையை மூடாவிட்டால் உங்கள் (நேட்டோ) குடிமக்களின் மீது தாக்குதல் நடத்தப்படும் நிலை ஏற்படும்.

போலந்து எல்லையையொட்டி வான் தாக்குதலை ரஷ்யா நடத்தி விட்டது. இதனால் நேட்டோவில் உள்ள உறுப்பு நாடுகள் மீது எந்த நேரத்திலும் ரஷ்யா தாக்குதலில் ஈடுபடலாம். இதனால் நேட்டோ இனியாவது கவனமுடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## ஒபாமாவுக்கு கொவிட் தொற்று

(வோஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுகள் குறைந்தாலும் கூட, தீவிரமான அறிகுறிகளைத் தடுக்கவும், மற்றவர்களுக்கு கொரோனா தொற்றை ஏற்படுவதைத் தடுக்கவும் ,நீங்கள் விரைவில் தடுப்பூசி செலுத்திக் கொள்ளுங்கள் என அவர் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (நி)

## உக்ரைனில் அமெரிக்க ஊடகவியலாளர் சுட்டுக்கொலை

(கீவ்)

உக்ரைனின் கீவ் நகரின் ரஷ்ய படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அமெரிக்க ஊடகவியலாளர் என கீவ் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் கீவின் வடமேற்கு புறநகர் பகுதியான இர்பினில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் குறித்த ஊடகவியலாளர் உயிரிழந்ததுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கனடாவில் இடம்பெற்ற விபத்தில் 5 இந்திய மாணவர்கள் பலி

(ஒட்டாவா)

கனடாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் 5 இந்திய மாணவர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.


கனடாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இந்தியாவைச் சேர்ந்த 5 மாணவர்கள் உயிரிழந்துள்ளதுடன்மேலும் இருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலையில் கனடாவின் டொரன்டோவிலுள்ள நெடுஞ்சாலை ஒன்றில் பயணிகள் வானில் இந்தியாவைச் சேர்ந்த மாணவர்கள் பயணம் செய்துள்ளனர்.

அப்போது எதிரே வந்த கனரக வாகனத்துடன் வான் மோதியதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த விபத்து குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## பிரெஞ்ச் வேட்பாளர் மீது முட்டை தாக்குதல்



(பாரிஸ்)

பிரெஞ்சு ஜனாதிபதி வேட்பாளர் மீது முட்டை வீசு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.கடந்த சனிக்கிழமை காலை இந்த எதிர்பாராத தாக்குதல் இடம் பெற்றுள்ளது.அவர் காரை விட்டு இறங்கிய நொடியில், அவரது காரை நெருங்கிய ஒருவர், அவரது தலையில் முட்டை ஒன்றினால் தாக்கியுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர் உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகள் இடம் பெற்று வருகிறது.

## தூதரகம் மீது ஏவுகணைகள் வீச்சு அமெரிக்கா கடும் கண்டனம்



(வோஷிங்டன்)

வடக்கு ஈராக் பகுதியில் உள்ள இர்பில் நகரில் புதிதாக நிறுவப்பட்ட அமெரிக்க தூதரகம் மீது நேற்று முன்தினம் ஏவுகணைகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 12 க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் ஏவப்பட்டன.

இதில் கட்டடங்கள் சேதம் அடைந்தன. தூதரகத்துக்கு அருகில் உள்ள டெலிவிஷன் அலுவலக கட்டடமும் பலத்த சேதமானது. இந்த தாக்குதலில் உயிரிழப்புகள் ஏற்படவில்லை. பக்கத்து நாடான ஈரானில் இருந்து இந்த ஏவுகணைகள் ஏவப்பட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டி உள்ளது. இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தவும் உத்தரவிடப்பட்டது.

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே ஏற்கனவே மோதல் போக்கு இருந்து வரும் நிலையில் இந்த ஏவுகணை தாக்குதல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வவுனியாவில் போராட்டம்




(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 9 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நீக்கப்பட்ட விசேட அலுவலக செயற்திறன் முறையை மீள கொடு, பயணக்கொடுப்பனவு உட்பட அனைத்து கொடுப்பனவுகளையும் உயர்த்து, பட்டதாரிகளுக்கு உடன் பதவி உயர்வை வழங்கு, சம்பள முரண்பாடுகளை அகற்று, பட்டதாரிகளின் சம்பளத்தை உயர்த்து போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை இதன் போது ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (4-5-299)

# கால்நடைகளை கட்டுப்படுத்த கமக்கார அமைப்பால் நடவடிக்கை

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவை பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பினர் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி வரை கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட வயல் நிலங்களில் விவசாயிகள் சிறுதானியச் செய்கையில் ஈடுபட்டு வரும் நிலையில் இதுவரை கால்நடை வளர்ப்போர் கால்நடைகளை கட்டுப்படுத்தாத நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனங்கிளப்பு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

மே-15 வரை கால்நடைகளைக் கட்டுப்படுத்த உரிமையாளர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

அவ்வாறு பொறுப்புடன் நடக்காதவிடத்து கால்நடைகள் பிடிக்கப்பட்டால் கம நலசேவை நிலையத்தில் தண்டப்பணம் செலுத்திய பின்னரே கால்நடைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். பயிரழிவை ஏற்படுத்தும் மாடுகளைப் பிடிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.


இந்த தீர்மானப் பிரதிகளை இராணுவம்,பொலிஸ்,பிரதேச செயலகம்,கமநல சேவை நிலையம் ஆகியவற்றுக்கு வழங்கி வைப்பதுடன்-இது தொடர்பாக துண்டுப்பிரசுரம் மற்றும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து கால்நடை வளர்ப்பவர்களுக்கு தெரியப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (4-5-30)

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சமையல் எரிவாயு விநியோகம்



(தருமபுரம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலைமை அடுத்து நேற்று கிளிநொச்சி மாவட்ட லிற்றோ சமையல் எரிவாயு நிறுவனத்திற்கு முன்னால் அதிகாலை 3 மணி தொடக்கம் நின்ற பொதுமக்களில் சுமார் 75 பேருக்கு மாத்திரமே சமையல் எரிவாயு வழங்கப்பட்டது.இதனால் பலர் ஏமாற்றத்துடன் திரும்பியதாக கவலை தெரிவித்துள்ளனர் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக சமையல் எரிவாயுவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர். (4-5-316)




யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் இடையே நடத்தப்பட்ட 2021 ஆண்டிற்கான முகாமைத்துவ போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றி வரும் கிராம உத்தியோகத்தர் அ. விமலேசன் யாழ். மாவட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளார். (படம்- மகாலிங்கம்)

# நிர்வாகத் தெரிவு

(நெளுக்குளம்)

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனியார் விருந்தினர் விடுதியில் முதற்தடவையாக வாக்கெடுப்பு முறைமையில் தெரிவு செய்யப்பட்டது .

வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் நகரசபை செயலாளர் ஆர் . தயாபரன், மூன்று கிராம அலுவலகர்களின் நேரடிக் கண்காணிப்பில் 19 பேர் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு சங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களினால் புதிய நிர்வாக சபைக்கு பத்து நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் .

தலைவராக எஸ்.சுஜன் , செயலாளராக ஆ .அம்பிகைபாகன் , பொருளாலராக என்.செல்வரட்ணம் ஆகியோர் ஏகமனதாக சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டனர். (4-5-299)



கம்பர்மலை கலைவாணி சனசமூக நிலையத்தில் அண்மையில் சிறுவர் சந்தை நிகழ்வு இடம்பெற்றது.

(படம்-மகாலிங்கம்)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்செழு வடக்கு அருள்மிகு வல்லியப்பர் சிவன் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.45 மணிமுதல் 10.45 மணிவரை சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 160-200 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 |
| தக்காளி | 250 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 90 | 80 |
| கோவா | 100 | 100 | 120 |
| கரட் | 200 | 280 | 320 |
| பூசணி | 120 | 120 | 140 |
| புடோல் | 200 | 180 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 250 |
| பெரிய வெங்காயம் | 130 | 140-170 | 200 |
| பாகற்காய் | 350 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 200 | 150 | 160 |
| லீக்ஸ் | 180 | 160 | 180 |
| பீற்றூட் | 180 | 140 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1200 |
| போஞ்சி | 280 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 160 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 100 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 170 | 160 |
| வெங்காயப்பூ | 150 | 180 | 250 |
| முள்ளங்கி | 50 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | 80 | -- |

# மர்மப் பொருளுடன் ஒருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஓஷன்பார்க் விருந்தினர் விடுதிக்கு அருகில் மர்மப் பொருளுடன், ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து 1 கிலோ 595 மில்லிக்கிராம் எடையுடைய மர்மப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.



இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

இலங்கை வங்கி நெடுந்தீவுக் கிளையின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று செவ்வாய்க் கிழமை காலை-9.30 மணி முதல் நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் [illegible] ள்ளனர். (4-5-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால்

## ஜனநாயக வழியில் அரசை விரட்டியடிப்போம்

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசுக்கு ஒரு மாதம் காலக்கெடு வழங்கப்படும். இல்லையேல் எமது போராட்டம் தீவிரமடையும், ஜனநாயக வழியில் அரசை விரட்டியடிப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

அரசுக்கு ஒரு மாதம் காலக்கெடுவை வழங்குகின்றோம். அந்தக் காலப்பகுதிக்குள் தீர்வு இல்லையேல் எமது போராட்டம் வலுக்கும். கொழும்பு வருவதற்கு பேருந்து இல்லாவிட்டால் மக்கள் நடந்தாவது வருவார்கள்.

எனவே, எமது போராட்டத்தைத் தடுக்க முற்பட வேண்டாம். நிச்சயம் எமது பலத்தைக் காட்டுவோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# நாட்டில் டொலர் இல்லை

## மரணத்தின் விளிம்பில் இருக்கின்றோம்

## அமைச்சர் பகிரங்கம்



(கொழும்பு)

நாட்டில் தற்போது டொலர்கள் இல்லை. வெளிநாட்டு கையிருப்பு இல்லை. நாம் உண்மையில் மரணத்தின் விளிம்பில் இருக்கிறோம் என அமைச்சர் மகிந்த அமர வீர தெரிவித்தார்.

இப்போது எங்களிடம் அதிக எண்ணிக்கையிலான புற்று நோயாளிகள் உள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. இதனை குறைக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இந்த நேரத்தில் அரசியல் பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இருப்பவர்களை எப்படி வெளியேற்றுவது. எப்படி பதவிகளை எடுப்பது என்பது முக்கியமல்ல.

ஜனாதிபதியைச் சந்தித்த போது சர்வகட்சி மாநாட்டை முன்மொழிந்தோம். மனிதர்கள் படும் துன்பங்களைப் பற்றி அவரிடம் கூறினோம்.

அண்மைக்காலமாக டீசல் வாங்க மக்கள் வரிசையில் நிற்கின்றனர். வரிசையில் போய் இன்னும் விலை உயர்ந்த டீசலை நிரப்பிக்கொண்டு, எரிபொருள் தீரும் வரை எரிவாயு தேடி அலைய வேண்டும். இது ஒருவரது தவறு அல்ல, இந்த முழு அரசாங்கத்திலும் ஏதோ தவறு இருக் கிறது என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# விலையேற்றம் தொடர்பில்

## ஆளும்கட்சி மௌனமாக இருப்பது ஏன்?

## கம்மன்பில கேள்வி



(கொழும்பு)

எரிபொருளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு முன்னாள் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், உலக எண்ணெய் விலை உயர்வால் இலங்கையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை.

இலங்கையின் இருப்புக்களை தவறாக நிர்வகித்தல் மற்றும் ரூபாயின் மீதான கட்டாயக் கட்டுப்பாடு ஆகியவை எரிபொருள் விலை உயர்வு உட்பட தற்போதைய நெருக்கடிக்குக் காரணம் எனத் தெரிவித்த அவர்,

முன்னதாக விலை அதிகரிக்கப்பட்ட போது பதவி விலகுமாறு கூறிய பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், எரி பொருள் விலை வரலாறு காணாத வகையில் உயர்த்தப்பட்ட போது வாய்மூடி மௌனமாக இருப்பதாக உதய கம்மன்பில சாடினார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## கண்டிப்பும் தண்டிப்பும்

மற்றவர்களை நம் வழிக்குக் கொண்டு வருவதில் அல்லது முறையான வழியில் நெறிப்படுத்துவதில் நான்கு வழிமுறைகள் இருக்கின்றன. அவை தாம் சாம, பேத, தான, தண்டம் எனப்படுகின்றன.

சாமம் என்பது உன்னைப் போல் உண்டா? என்று தாஜா செய்வது.

பேதம் என்பது மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பேசிச் சம்மந்தப்பட்ட அவரை மட்டும் பாராட்டுவது.

தானம் என்பது அதைத் தருவேன் இதைத் தருவேன் என்று சொல்லி ஆசை காட்டுவது.

தண்டம் என்பது நீ அப்படிச் செய்யவில்லை என்றால் என்ன நடக்கும் தெரியுமா? என்று கேட்டுப் பின்விளைவுகளைச் சொல்லி மிரட்டுவது, இதை கண்டிப்பது என்றும் வைத்துக் கொள்வோம்.

இந்த நான்கு முறைகளில் தண்டிப்பு அடங்கா விட்டாலும் இறுதியான வழி அதுதான்.

குறைகளைச் சுட்டிக்காட்டி கண்டிக்கும் வழக்கத்தை தனியேதான் செய்ய வேண்டும். பலர் முன்னிலையில் செய்யக் கூடாது. காரணம், சம்மந்தப்பட்டவர் தம் குறைகளைச் சுட்டிக் காட்டினர்– நாம் திருந்த வேண்டும் எனச் சிறிதும் எண்ணாமல், பலர் முன் என்னை அவமானப்படுத்தி விட்டார் என்று எண்ணத் தொடங்கி வெறுப்பையும் வேதனையையும் பெரிதாக்கிக் கொள்வார். எனவே கண்டிப்பவரின் விருப்பமும் நோக்கமும் முற்றிலும் நிறைவேறாமல் போய்விடுகின்றது. குறைகளைச் சுட்டிக்காட்டி கண்டிப்பதைப் பெரும்பாலானோர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

கண்டிப்புகள் அவரவர் தத்தம் தவறுகளை உணர்ந்து திருந்துவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமே தவிர அவர்களை விரக்தியடையச் செய்வதாக அமைந்து விடக்கூடாது.

மருந்தில் தேன் கலந்து கொடுப்பது போல் கண்டிக்கும்போதும் அன்பைக் கலந்து எடுத்துச் சொல்ல வேண்டும்.

அக்கறை காரணமாகவும், ஆர்வம் காரணமாகவும் அவை சொல்லப்படுகின்றன என்பதாக மற்றவர்களை ஏற்றுக்கொள்ள வைக்க வேண்டும்.

மாறாக,

உணர்ச்சிப் பிழம்பாகிக் கத்திக் கூச்சலிட்டு காரிய நோக்கம் நிறைவேற இயலாதபடி செய்து விடக் கூடாது.

பலமுறை கண்டித்து எச்சரிக்கை தரப்பட்ட பிறகே தண்டிக்கும் முயற்சியில் இறங்க வேண்டும்.

அத்தகைய தண்டிப்பு செய்த குற்றத்தின் மீது அச்ச உணர்வை ஏற்படுத்துவதாகும்; மற்றவர்களிற்கு ஒரு பாடமாகவும் இருக்க வேண்டுமே தவிர, ஒரு பழிவாங்கும் படலமாய் அமைந்து விடக் கூடாது.

எல்லாவற்றுக்கும் மேலாக –

அந்தத் தண்டனையை மற்றவர்களுக்கு வழங்கு முன் சட்டபூர்வமாகவும், சமுதாய ரீதியாகவும் நமக்குத் தகுதியிருக்கிறதா என்று ஒரு கணமேனும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

## அம்புலிமாமா

### மூன்று மோதிரங்கள்



இதை அணிந்து கொண்டால் அரிய யோசனைகள் தோன்றுமாம். இந்த சிவப்புக்கல் மோதிரத்தை மாதவன் கொடுத்தான். இதை அணிபவனுக்கு அந்த அரிய யோசனைகளை நடைமுறையில் கொண்டு வருவதற்கான வழி தெரியுமாம். இந்த நீலக்கல் மோதிரத்தை கோவிந்தன் கொடுத்தான். இதனை அணிபவனுக்கு அந்த யோசனைகளை அமுல்படுத்தும் வழியில் சென்று செயற்படுத்தும் சக்தி கிடைக்குமாம். எப்படி இருக்கின்றன இந்த மோதிரங்கள்? என்று கேட்டான்.

லதாங்கியும் "ஆகா! அருமையான மோதிரங்களே. நான் அந்த மூவரையும் காண விரும்புகிறேன். மக்கள் நலனில் அக்கறை கொண்ட அவர்கள், நாடாசை கொண்டு என்னை மணக்க விரும்பும் அரச குமாரர்களை விட எவ்வளவோ மேல். இதுவரை நீங்கள் கூறிய அரச குமாரர்களை எல்லாம் புறக்கணித்து வந்தேன். இப்போது மக்களின் நலனைக் கருதும் மூவர் வந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை நான் என் கணவராகத் தேர்ந்தெடுக்கிறேன்" என்றாள். மன்னனும் மகிழ்ந்து போய் "பேஷ் பேஷ். இப்போதாவது நீ ஒருவனை மணம் செய்து கொள்வதாகக் கூறினாயே, அதுவே போதும். வந்த அரச குமாரர்களை எல்லாம் ஏதாவது ஒரு குறை கூறித் தட்டிக் கழித்தாய். போகட்டும். இந்த மூவரும் ஷத்திரியர்களே. பார்க்க ராஜ குமாரர்கள் போல வாட்டசாட்டமாக இருக்கிறார்கள். இவர்களில் நீ யாரைத் தேர்ந்தெடுத்தாலும் நான் என் சம்மதத்தை அளிக்கிறேன். அவர்கள் கொடுத்த மோதிரங்களையும் அவரவர்களுக்கே திருப்பிக் கொடுத்தும் விடுகிறேன். ஆனால் நீ உன் முடிவை சட்டெனத் தெரிவி. உடனே திருமணத்தை நடத்தி வைக்கிறேன்" என்றான்.

லதாங்கியும் " நான் அவர்களைப் பார்த்து விட்டு ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறேன். நீங்கள் அவர்களது சம்மதத்தையும் கேளுங்கள்." என்றாள். மன்னனும் அவர்களோடு பேசி அவர்கள் சம்மதமும் பெற்று அவர்களை அழைத்து வந்து லதாங்கிக்கு காட்டினான். அவர்களும் லதாங்கியைப் பார்த்தார்கள்.

அப்போது லதாங்கி "அப்பா! நீங்கள் அவர்களது மோதிரங்களை அவரவர்களுக்கு திருப்பிக் கொடுத்து விட்டீர்கள். நான் பச்சைக்கல் மோதிரம் அணிந்திருக்கும் கேசவனை மணக்க விரும்புகிறேன்." என்றாள்.

மன்னனும் "உன் விருப்பப்படியே விவாகம் நடக்கும் எனக் கூறி உடனேயே திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யலானான்: ஒரு நல்ல முகூர்த்தத்தில் கேசவனுக்கும் லதாங்கிக்கும் முறைப்படி விவாகம் நடைபெற்றது. (தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்



இது என் முத்து மாலை; இதனை ஏற்றுக் கொள்; இந் நல்ல செய்தியை நீட்டித்துச் சொல்லியது ஏன்? தோழி! நீ எனக்கு நல்லவள்; இதைவிட நல்ல செய்தி நீ வேறு என்ன சொல்ல முடியும்? கூனிலும் இந்த முத்துமாலை உனக்குப் பொலிவு சேர்க்கும்; வானினும் மிக்க பெருமை இதனால் அடைவாய்" கூறி அதனை நீட்டினாள்.

வாங்கி அதைத் தரையில் கொழித்தாள்; அவளைப் பழித்தாள்; சிவக்க விழித்தாள்.

சிந்திய முத்துகள் மாலையைத் தந்தவளைப் பார்த்துச் சிரித்தன.

மனம் கொதித்தாள்; நெஞ்சு பதைத்தாள்; நிலத்தை உதைத்தாள்; அவள் பேச்சினை வெறுத்தாள்.

"இதன் விளைவை நீ எண்ணிப்பார்; கோசலை இராமன் தாய்; தலைமை அவளுக்கு; அவல நிலைமை உனக்கு கைகட்டிப் பிழைப்பார் எல்லாரும் அவள் வீட்டு முற்றத்தில் காத்து இருப்பர்"

"விரும்பினால் நீ அவளுக்கு அடிமைப்படு; அவளுக்கு உழைத்துப் பாடுபடு; என்னை விடு; நான் அவள் தாதியர்க்கு ஆட்படுதல் செய்யேன்; இது உன் தலைவிதி; வேண்டாம் எனக்கு அந்த அவதி" என்றாள்.

"சிவந்த வாய்ச் சீதையும் கரிய செம்மலும் நிவந்த ஆசனத்தில் இருக்கப் போகின்றார். [illegible] உன் மகன் பரதன் அவர்களுக்குக் கவரி வீசி அடிமைத் தொழில் இயற்றப் போகிறான்". "இராமன் பதவி பெறுகிறான் என்பதைக் கேட்டு, நீ நிலைகொள்ளாமல் மகிழ்கிறாய்; அதற்கு நீ பரதனைப் பத்து மாதம் சுமந்திருக்கத் தேவை இல்லை. பெற்ற மகனுக்கு வாழ்வு தேடாமல், செல்வ மகனுக்குச் சீர்கள் தேடுகிறாய்; உன் தாய்மை உறங்குகிறது. அதை நான் தட்டி எழுப்ப வேண்டி இருக்கிறது"

"இந்தக் கிழவன், நயமாகப் பேசிப் பரதனைப் பாட்டன் வீட்டுக்கு ஏன் அனுப்பி வைத்தான்? திட்டமிட்டுச் செய்த சதி இது; நீ பிறந்தது அரசவீடு; அரசர் வீட்டில் வாழ்க்கைப் பட்டாய்; நீ விரசு கோலங்கள் இழந்து விரச வாழ்க்கை மேற்கொள்ளப் போகிறாய்; நினைத்துப் பார் பின் வருவது சிந்தித்துச் செயற்படுக" என்றாள். வரம்பு மீறி அவள் தரம் கெட்டுப் பேசுவதைக் கைகேயியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; விட்டால் விண்ணில் பறக்கிறாய்; எல்லை கடக்கிறாய்; அதனால், தொல்லைகளைத் தேடுகிறாய். அக்கம் பக்கத்தில் யாராவது நீ பேசுவது கேட்டு அறிந்தால், உன்னை அக்குவேறு ஆணிவேறாய்ப் பிய்த்து விடுவர்; சூழ்ச்சி செய்கிறோம் என்று மன்னன் ஆட்கள் நம்மை வளைத்துக் கொள்வர்; அதனால், விளையும் விளைவுகளை நினைத்துப் பார்! மனம் போன போக்கில் உன் சிந்தனைகளைச் சிதறவிடுகிறாய்" என்று அறிவிப்புத் தந்தாள்.

"அஞ்சுகமே! உன் சுகம் கருதியே பேசுகிறேன்; நீ அரசன் ஆணைக்கு அஞ்சுகிறாய்; இன்னும் எதுவும் மிஞ்சிப் போகவில்லை." "பாவம்! பரதன் பரிதவிப்புக்கு ஆளாகிறான்; அவன் செய்த குற்றம் உன் வயிற்றில் பிறந்தமையே அதுதான் பெரிய குற்றம்."

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதற்ற ஊசியும் வாராது காண்
கடை வழிக்கே. –பட்டினத்தார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகா அலெக்சாண்டரின் தத்துவத்தை ஆட்சியாளர்கள் அறிய வேண்டும்!

உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டர் ஒரு நாள் தன் படைத்தளபதியை அழைக்கின்றார்.

நாளை சூரியோதயத்துக்கு முன்னதாக என்னுயிர் பிரிந்துவிடும்.

என் உயிரற்ற உடலை மயானத்துக்கு எடுத்துச் செல்லும்போது என் இரண்டு கைகளும் வெளியில் தெரியக்கூடியதாகக் கொண்டு செல்லுங்கள் என்று கூறுகின்றார்.

இதனைக்கேட்ட படைத்தளபதிக்கு எதுவும் புரியவில்லை. உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டர் எதற்காக இவ்வாறு கூறுகிறார் என்பதை அறிவதற்காக ஏன்? மன்னா! என்று படைத்தளபதி கேட்கின்றான்.

அதற்கு மகா அலெக்சாண்டர்; இந்த உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டரும் போகும்போது வெறுங்கையோடு தான் போகிறார் என்பதை இனியேனும் இந்த உலகம் புரிந்து கொள்ளட்டும் என்கிறார்.

ஆம், முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒருபிடி சாம்பராய் எரிந்து... என்ற தத்துவமும்

காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே... என்ற உபதேசமும் மகா அலெக்சாண்டர் கூறிய செயல்முறையின் தியறியாம்.

எனினும் இன்னமும் இந்த உலகம் திருந்துவதாக இல்லை.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு கொரோனாவையும் ரஷ்ய – உக்ரைன் போரையும் சாட்டுதல் செய்கின்ற அளவில் ஆட்சித் தரப்பு இருக்கிறதெனில்,

நிலைமை எப்படி என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

கொரோனாவும் ரஷ்ய – உக்ரைன் போரும் அண்மிய சம்பவங்கள்.

ஆனால் இலங்கையின் பொருளாதாரக் கருவறுப்பு எப்போது ஏற்பட்டதென்பது ஆட்சியாளர்களுக்கும் ஆட்சிப்பீடத்தில் இருந்தவர்களுக்கும் நன்கு தெரியும்.

ஆக, இருப்பதையெல்லாம் எனதாக்கும் பேராசையின் விளைவாக எழுந்ததே இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக் கடி.

உண்மை. அரசன், நாடாளும் மன்னன், ஆட்சியாளன் என்றால் அவன் மக்களுக்கு ஈகை செய்பவனாக இருக்க வேண்டும்.

நம்மவர் என்றும் பாராமல் நீதி வழங்க வேண்டும். பேதமையின்றி நாட்டு மக்கள் அனைவரையும் சமமாக நடத்த வேண்டும். இதுவே மன்னருக்கு அழகு.

ஆனால் இங்கோ மக்களிடம் இருந்து வசூலிப்பது என்ற நிலைமை வந்த பின்னர் நாடு நாடாக இருக்க முடியாதென்பது உண்மையே.

ஆம், இன்றைய இலங்கையின் பொருளாதாரம் என்பது சூறையாடப்பட்ட தேசத்தின் நிலைக்கு வந்துவிட்டது.

இந்தக் கொடுமையில் இருந்து நாட்டை மீட்பதாக இருந்தால், அதற்கான ஒரே வழி மகா அலெக்சாண்டர் கூறிய தத்துவத்தை ஆட்சியாளர்கள் உள்ளூர உணர்ந்து தம்மிடம் இருப்பதை நாட்டுக்கு தானமாக்க வேண்டும். இல்லையேல் இலங்கைக்கு மீட்சி இல்லை.

# மக்கள் அபிவிருத்தித் திட்டங்களை எழுந்தமானமாக செயற்படுத்த முடியாது

## யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களின் அபிவிருத்தியில் மாவட்ட செயலகம் எழுந்தமான முடிவுகளை எடுத்துச் செயற்படுத்த முடியாது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்னாள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் நேற்று போராட்டம் நடத்தியமை தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

சில அபிவிருத்தித் திட்டங்கள் மக்கள் விருப்பத்துடனான முன்னுரிமைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களாக பிரதேச செயலகங்கள் ஊடாக தெரிவுசெய்யப்பட்டு மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும்போது சுற்றுநிருபங்களுக்கு மாறாக எழுந்தமானமாகச் செயற்படுத்த முடியாது.

ஆகவே குற்றச்சாட்டுகளை முன்வைப்போர் ஆதாரங்களுடன் முன்வைத்தால் அதனை சரி செய்வதற்கு தயாராக இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-104)

### 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான
# புகையிலைச் செடிகள்
## விஷமிகளால் வெட்டி நாசம்

(கரணவாய்)

வடமராட்சி அத்தாய்ப் பகுதியில் செய்கை பண்ணப்பட்டிருந்த புகையிலைச் செடிகள் விஷமிகளால் வெட்டி நாசப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் சுமார் ஏழு இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக புகையிலைச் செடி உரிமையாளரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் பணப்பயிராக பயிரிடப்படும் பயிர்களில் புகையிலையும் ஒன்று. அந்த வகையிலே வடமராட்சியில் பெரும்பாலான விவசாயிகள் புகையிலைச் செய்கையினையே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அல்வாய் கிழக்கு, அத்தாய்ப் பகுதியில இரண்டு தோட்டங்களில் பயிரிடப்பட்டு இருந்த புகையிலைச் செடிகள் விசமிகளால் வெட்டி நாசப்படுத்தப்பட்டுள்ளது.

முதல் நாள் நீர் இறைத்து விட்டு வந்த நிலையில் செடிகள் மறுநாள் நாசம் செய்யப்பட்டுருந்தாக புகையிலைச் செடி உரிமையாளர் தெரிவித்தார். (ம-60)

# 53 வயது ஆசிரியர் சாவகச்சேரியில் கைது

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 13 வயதான மாணவனை துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தின் பேரில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிப்பிற்குள்ளான மாணவன் மற்றும் மாணவனது தாயார் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த 53 வயதான ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிப்பிற்குள்ளான மாணவனை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தும் முகமாக வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை மீசாலைப் பகுதியைச் சேர்ந்த குறித்த ஆசிரியர் மாணவனின் உறவுகளின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-30)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்**

சூடுவெந்தபுலவு ஆகிய இடத்திலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## கடவுளிடம் சரணடைந்தால்...

❖ மன ஒருமைப்பாட்டைப் பழகும் ஒவ்வொரு முறையும் மனதிற்கும் உடலுக்கும் பூரண ஓய்வு கிடைக்கிறது. ஆனால் முறை தவறிச் செய்தாலும் மனம் போதிய அளவு அடக்கப்படாமல் இருந்தாலும் இத்தகைய இடையூறுகள் ஏற்படுகின்றன. அப்போது அகங்காரத்தை ஜெயிப்பதும் இறைவனிடம் சரண் புகுதலும் மனதை வலுப்படுத்தி புதிய சக்தியைத் தரும்.

❖ நாம் படும் துயரம் அறியாமையினால் வருகிறது. உண்மையையும் உண்மை இல்லாதவற்றையும் வேறுபடுத்தி அறிய முடியாது என்பது விவேகமின்மையால் வருகிறது.

❖ நாம் எல்லோருமே தீமையை நன்மையாகவும் கனவை உண்மையாகவும் கருதுகிறோம். ஆன்மா ஒன்றே உண்மைப்பொருள். அதை நாம் மறந்து விட்டோம்.

❖ உடல் என்பது ஒரு பொய்க் கனவு. ஆனால் நாம் என்பது உடல்கள் என்று நினைக்கின்றோம். இந்த விவேகமின்மையே துயரத்திற்குக் காரணம். இது அறியாமையால் ஏற்படுகிறது.

❖விவேகம் வலிமையைத் தருகிறது. அப்போது தான் உடல், சொர்க்க லோகங்கள், தேவர்கள் போன்ற [illegible] இனம், அடையாளம், இடம் இவற்றை அடிப்படையாகக் வைத்து [illegible] அறியாமை உண்டாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 19

ஒரு தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் போது இந்தச் சமூகங்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கின்ற வகையில் பிரேரணைகளை முடிந்த அளவு சேர்த்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. மற்றும் தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரியின் கணிசமான விலகல் வரம்புகளுக்குட்பட்டதாகவும், 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இருபது (20) சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை, ஏனென்றால் அவை எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்கவில்லை மற்றும் குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை. தொகுதிகளுக்கு பெயரிடும் போது, சரித்திர பிரசித்தி பெற்ற பெயர் இடப்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத் தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது.

சுருக்கமாகக் கூறினால் 5 பிரதேச செயலகங்கள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 4 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 4 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், ஒரு பிரதேச செயலக பிரிவு 4 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் தொகுதிக்கான சராசரி மக்கள் தொகையை விட்டு −8.9% மற்றும் + 6.6% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக் கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து களுத்துறை மாவட்டம் 11 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.




பாணத்துறை (46), பண்டாரகாம (57), ஹொரணை (64), புளத்சிங்கள (82), மதுராவெல (98), வாத்துவ (58), களுத்துறை (57), தொடங்கொட (65), பேருவளை (47), மத்து கம (86), வளள்ளாவிற்ற (102) என்பனவாகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (C3) இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை (c3)-களுத்துறை மாவட்டம் தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்

| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பாணத்துறை | 91838 | 1025 | 17694 | 600 | 111157 |
| பண்டாரகம | 96411 | 658 | 19782 | 258 | 117109 |
| ஹொரணை | 115938 | 2122 | 112 | 236 | 118408 |
| புளத்சிங்கள | 102387 | 14773 | 172 | 80 | 117412 |
| மதுராவல | 98824 | 6217 | 2174 | 69 | 107284 |
| வாத்துவ | 112688 | 465 | 432 | 301 | 113886 |
| களுத்துறை | 96094 | 1851 | 12375 | 316 | 110636 |
| தொடங்கொட | 103699 | 1351 | 232 | 93 | 105375 |
| பேருவளை | 45746 | 1353 | 56835 | 194 | 104128 |
| மத்துகம | 99352 | 12996 | 2949 | 105 | 115402 |
| வளள்ளாவிற்ற | 97130 | 3441 | 563 | 17 | 101151 |
| களுத்துறைமாவட்டம் | 1060107 | 46252 | 113320 | 2269 | 1221948 |

**ஒரு பிரேரணை சிறுபான்மை இனத்தின் (முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள்) உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேர்தல் தொகுதிகளை உருவாக்கும்படி கோரி இருந்தது. முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 9.3% இலும் மற்றும் 3.8% இலும் உள்ளதை குழு அவதானித்தது. அதே நேரத்தில் ஒரு உறுப்பினருக்கான சனத்தொகை வீதம் 9.1% ஆகும். இதன் பிரகாரம் இம் மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்காக பேருவளை தொகுதி ஒதுக்கப்பட்டது.**

### மத்திய மாகாணம் பற்றிய தகவல்கள்

இலங்கையின் மத்திய மலைநாட்டில் 5,674 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ள மத்திய மாகாணத்தின் நிலப்பரப்பில் 1,940 சதுர கி.மீ. கண்டி மாவடத்திற்கும் 1,993 சதுர கி.மீ. மாத்தளை மாவட்டத்திற்கும் 1,741 சதுர கி.மீ. நுவரெலியா மாவட்டத்திற்கும் உரித்தாக உள்ளது. நாட்டின் மொத்தப்பரப்பில் 8.6% மத்திய மாகாணத்திற்கு உரித்தாக உள்ளது. 5,575 கி.மீ. நிலப் பரப்பையும் 99 சதுர கி.மீ. நீர்ப்பரப்பையும் கொண்டுள்ள இந்த மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 1.7 % உள்ளக நீரேந்துப் பிரதேசமாக காணப்படுகின்றது.

வடக்கு திசையில் வட மத்திய மாகாணத்தையும் தெற்குத் திசையில் சப்ரகமுவ மாகாணத்தையும் கிழக்கு திசையில் ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களையும் மேற்குத் திசையில் வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களையும் எல்லைகளாகக் கொண்டு அமையப் பெற்றுள்ளது. 2010 ஆம் ஆண்டளவில் மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 27.4% அதாவது 1,556 சதுர கிலோ மீற்றர் வனப் பிரதேசமாக காணப்பட்டது.

2016 ஆம் ஆண்டு மாகாணத்தின் வீதிகளினது மொத்த நீளம் 3,991 கி.மீ. ஆகும். புனித தந்ததாது வைக்கப்பட்டுள்ள தலதாமாளிகை அமைந்துள்ள காரணத்தினால் நாட்டின் புனித நகரமாக கணிக்கப்படும் இரண்டாவது பெரிய நகரான கண்டி நகர் மத்திய மாகாணத்தின் தலைநகராக காணப்படுகின்றது.

**இலங்கையின் மத்திய மலைநாட்டில் 5,674 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ள மத்திய மாகாணத்தின் நிலப்பரப்பில் 1,940 சதுர கி.மீ. கண்டி மாவட்டத்திற்கும் 1,993 சதுர கி.மீ. மாத்தளை மாவட்டத்திற்கும் 1,741 சதுர கி.மீ. நுவரெலியா மாவட்டத்திற்கும் உரித்தாக உள்ளது. நாட்டின் மொத்தப்பரப்பில் 8.6% மத்திய மாகாணத்திற்கு உரித்தாக உள்ளது.**

**மத்திய மாகாணம் வடக்கு திசையில் வடமத்திய மாகாணத்தையும் தெற்குத் திசையில் சப்ரகமுவ மாகாணத்தையும் கிழக்கு திசையில் ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களையும் மேற்குத் திசையில் வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களையும் எல்லைகளாகக் கொண்டு அமையப்பெற்றுள்ளது.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்ச...

மீனவர்கள், பெண்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து முதலாவது மிகப்பெரிய எதிர்ப்பு போராட்டத்தை அடுத்த வாரம் கொழும்பில் நடத்தவுள்ளது என அதன் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்களை மிகப்பெரும் கஷ்டத்திற்குள் தள்ளி இருக்கும் அரசாங்கம், தாம் மிகப்பெரிய தவறை செய்துவிட்டதாக இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், தற்போது பலவந்தமாக அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

நாட்டின் அனைத்து துறைகளும் பாரதூரமான ஆபத்தில் இருக்கும்போது, அரச தலைவர் பல அரச நிறுவனங்களுக்கு சென்று மக்களிடம் முட்டாள்தனமான கேள்வியை கேட்டு புகைப்படங்களில் தோன்றி, சுயதிருப்தி அடைந்து வருகிறார் எனவும் ரில்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தி, போராடி இந்த துஷ்ட ஆட்சியை விரட்டியடித்து மக்கள் சார்பு அரசாங்கத்தை உருவாக்குவோம் என நாங்கள் மக்களுக்கு கூறுகிறோம். இதற்கான தொடர் ஆர்ப்பாட்டங்களை நாங்கள் ஒழுங்கு செய்துள்ளோம் என்றார். (ம)

## பேருந்துக்...

போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம)

## நாடு...

நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்கள பணிப்பாளர் சங்யொங் ரீ, இணை நிதி அமைச்சர், திறைசேரியின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் நேற்று சந்தித்துள்ளனர்.

இலங்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாணய கையிருப்பினை அதிகரித்தல் மற்றும் நிலையான பாதையில் பொருளாதாரத்தை முன்னெடுக்கும் வேலைத் திட்டம் என்பன தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## இலங்கைக்கு...

பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன.

அதுமாத்திரமல்லாது, பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில், பிரித்தானிய அரசாங்கம் தனது பிரஜைகளுக்கு புதிய கட்டுப்பாடுகளை அறிவித்திருக்கிறது.

இது குறித்து பிரித்தானிய அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசிடம் போதிய அளவிலான பணம் இல்லாமையால் அடிப்படை தேவைகளுக்கான பற்றாக்குறை அங்கு ஏற்பட்டுள்ளது.

பலசரக்குக் கடைகள், மருத்துக் கடைகள், எரிபொருள் நிலையங்கள் போன்றவற்றில் சுற்றுலாப் பயணிகளும் வரிசைகளில் நிற்கவேண்டி வரும்.

அத்துடன் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படலாம். மேலும் டெங்கு மற்றும் கொரோன வைரஸ் பரவி வருவதால் விமான நடவடிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

அது மாத்திரமல்லாது, இச்சூழ்நிலையினால் நாடு எந்நேரங்களிலும் முடக்கப்படலாம்" என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

## நெருக்கடிகளை...

கிருலப்பனையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாட்டை உயர்த்துவதற்கு அனைத்து தரப்புகளுக்கும் இடையில் தேசிய உடன்பாடு அவசியம் என வலியுறுத்தியுள்ளார். இதேவேளை இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கூட இலங்கையின் நிலைமை இவ்வளவு மோசமாக இருந்ததில்லை என தெரிவித்துள்ளார்.

நெருக்கடிகளை தீர்க்கத் தவறினால் சில மாதங்களில் மக்கள் நாட்டை இழக்க நேரிடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் அதிக நேரத்தைச் செலவிட்டபோதும் தீர்வு காணப்படவில்லை என குற்றம் சுமத்தினார்.

நிதியமைச்சருக்கும் மத்திய வங்கியின் ஆளுநருக்கும் இடையில் முரண்பாடு இருப்பதாகக் கூறியுள்ள அவர், அதனை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ம)

## ஜனாதிபதி...

பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது அவசியம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் இந்த நேரத்திலே அரசாங்கம் அழைத்துள்ளமை தம்மை ஒரு பகடைக் காயாக பாவித்து சர்வதேச மற்றும் உள்ளக அரசியல் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நடவடிக்கையாக அமைந்துவிடும் என செல்வம் அடைக்கலநாதன் தமது [illegible] சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதியுடனான இன்றைய சந்திப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் வினவிய போது, இன்று காலை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் இல்லத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தாமும் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பை சந்திப்பதற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஏற்கனவே இரு சந்தர்ப்பங்களில் இந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான அழுத்தத்தை பிரயோகிக்குமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கூட்டமைப்பு உள்ளிட்ட 07 கட்சிகள் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இன்று சந்திப்பு நடைபெறவுள்ளது.

ஜெனீவாவில் தற்போது நடைபெற்று வருகின்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கையில் இலங்கை பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க விடயங்களில் பின்னடைவை சந்தித்துள்ளதாக தெரிவித்திருந்தார். (ம)

## சவுதி...

பைசல் பின் பர்ஹான் அல் ஸஊத் அவர்களிடம் தெரிவித்தார்.

சவுதி அரேபியாவின் வெளிநாட்டு அமைச்சருடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி அவர்கள் இதனைத் தெரிவித்தார்.

விவசாயம், புதுப்பிக்கத்தக்க வலு சக்தி உற்பத்தி, தொழிநுட்ப மேம்பாடு மற்றும் துறைமுக நகர் சார்ந்த வெளிநாட்டு முதலீடுகளுக்கான வாய்ப்புகள் குறித்து ஜனாதிபதிஅவர்கள்இதன் போது சுட்டிக்காட்டினார்.

கொவிட் தொற்று நோயின் காரணமாக, இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பில், இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல் ஸஊத் அவர்களின் அவதானம் செலுத்தப்பட்டதுடன், பரிமாற்றங்கள் குறைதல், சுற்றுலாத் துறையின் வீழ்ச்சி, மின் உற்பத்தியில் வறட்சியான காலநிலையின் தாக்கம் மற்றும் ஏற்பட்டுள்ள எரிபொருளுக்கான தேவை பற்றியும் ஜனாதிபதி அவர்கள் சுட்டிக்காட்டினார். (ம)

## சீனா, அமெ...

அதேவேளை அரசாங்கம் நாட்டின் மின் மற்றும் எரிசக்தி ஆகியவற்றின் ஏகபோக அதிகாரத்தை தமது நட்பான நாடுகளுக்கு வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் நேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

பசில் ராஜபக்ச என்ற அமெரிக்க பிரஜை, அவரது வாழ்க்கைக்காகவும் பிள்ளைகளுக்காகவும் நாட்டின் மின் மற்றும் எரிசக்தி அதிகாரத்தை தனக்கு நட்பான நாடுகளுக்கு வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.

இலங்கைக்கு எரிபொருளை விநியோகிப்பது சம்பந்தமான சகல முடிவுகளும் எதிர்காலத்தில் இந்திய எண்ணெய் நிறுவனமே எடுக்கும்.

அத்துடன் யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில் அமெரிக்க நிறுவனம் மின் உற்பத்தியை ஆரம்பித்த பின்னர் மின்சார விநியோகம் தொடர்பான தீர்மானங்களை அமெரிக்காவே எடுக்கும் என்றார். (ம)


மெகா பவர்
திகதி 14/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1054
வெற்றி எழுத்து J சுப்பர் இலக்க 01 வெற்றி இலக்கங்கள் 30 55 59 80

மஹஜன சம்பத
திகதி 2022/03/14
சீட்டிழுப்பு இலக்கம் 4706
ஆங்கில எழுத்து L வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 6 0 2 7 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022/03/14
சீட்டிழுப்பு இலக்கம் 3001
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 06 10 26 77
2225513 1982591 10989
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.03.14
சீட்டிழுப்பு இலக்கம் -736
O 12 33 64 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1509
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.03.14
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,796,960/-
வெற்றி இலக்கங்கள் 26 35 55 66 ஆங்கில எழுத்து R
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.03.14
சீட்டிழுப்பு இல: 3844
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,209,220/-
வெற்றி இலக்கங்கள் 16 38 43 52 ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1683 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022 / 03 / 14 தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 25 45 47 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 52,492,910/-
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
0114 824 824, 0112 333 778 or 1919
DLB<space>LOT<space>SB send 919
0114 825 825

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,837,526/-
திகதி 2022-03-14
சீட்டிழுப்பு வாரம் 3395
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 23 27 42 49 கன்னி
3083 220
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,669,080/-
அபிவிருத்தி லொத்தர் சபை

12 சுப்பர் ஜக்பொட்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 09 04 11 31 74
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 859
வர்ணம் இள நீலம்
திகதி 2022.03.14 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 221,957,263/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1819
சீட்டிழுப்பு திகதி 2022 / 03 / 14
வெற்றி இலக்கங்கள் 24 43 54 61 ஆங்கில எழுத்து C
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 32,437,736/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யான வாக்குறுதிகளால் எங்களை ஏமாற்ற முடியாது

## ஜனாதிபதி கோட்டாவுடனான சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்



(மட்டக்களப்பு)

**ஜனாதிபதி பொய்யான வாக்குறுதிகளை வழங்கி எங்களை ஏமாற்ற முடியாது என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

பயங்கரவாத தடைச் சட்டத்தினை நீக்க வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் போராட்டம் நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு செங்கலடியிலும் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், "எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவோரையும் தமிழ் இளைஞர்களையும் கைது செய்யலாம் என்ற காரணத்தினாலேயே இந்த சட்டத்தினை முழுமையாக நீக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றோம்.

வெளிவிவகார அமைச்சின் ஊடாக பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக ஆராயும் கூட்டத்திற்கு எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் அந்த கூட்டத்தினை நாங்கள் பகிஷ்கரித்தோம். பயங்கரவாத தடைச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வருவதை எங்கள் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தினை முற்றாக நீக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தினை முழுமையாக ஒழிக்கும் வரைக்கும் எங்களது போராட்டம் தொடரும். தற்போது கையெழுத்து போராட்டமாக நடைபெறும் இந்த போராட்டம் எதிர்காலத்தில் பல வடிவங்களில் முன்னெடுக்கப்படும்.

இதேநேரம் ஜனாதிபதி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க அழைப்பு விடுத்துள்ளார்.

நாங்கள் இரண்டு வருடமாக கேட்டுக்கொண்ட சந்திப்பினை ஜனாதிபதி தற்போது ஏற்படுத்தியுள்ளார்.

இந்த சந்திப்பினை வைத்துக் கொண்டு எங்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி எங்களை ஏமாற்றும் அளவுக்கு நாங்கள் இருக்கப் போவதில்லை. நீண்டகாலமாக தமிழ் மக்களின் தீர்க்கப்படாத நிலையில் உள்ள அரசியல் தீர்வு விடயத்திற்கு நாங்கள் முன்னுரிமை வழங்க தீர்மானித்திருக்கின்றோம் என்றார். (ம)

## இலங்கை ரூபாயின் பெறுமதி மீண்டும் பாரிய வீழ்ச்சி



(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

தனியார் வங்கிகளில் நேற்றைய தினம் 265 ரூபாயுக்கு அமெரிக்க டொலர் ஒன்று விற்பனை செய்யப்பட்டுள்ளது.

3 நாட்களுக்கு முன்னர் 260 ரூபாய் என்ற நிலையில் இருந்து ரூபாயின் பெறுமதி நேற்று மீண்டும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதற்கமைய நேற்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 265 ரூபாயும் கொள்வனவு விலை 255 ரூபாயாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 347 ரூபாயும் கொள்வனவு விலை 332 ரூபாயாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

யூரோ ஒன்றின் விற்பனை விலை 291 ரூபாயும் கொள்வனவு விலை 277.5 ரூபாயாகும்.

சுவிஸ் பிராங் ஒன்றின் விற்பனை விலை 285.5 ரூபாயும் கொள்வனவு விலை 271 ரூபாயாகவும் பதிவாகி உள்ளது.

கனேடிய டொலர் ஒன்றின் விற்பனை விலை 209 ரூபாயும் கொள்வனவு விலை 198.6 ரூபாயாகவும் பதிவாகி உள்ளது.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக டொலருக்கு எதிராக ரூபாயின் பெறுமதி மிகவும் அதிகமாக வீழ்ச்சி அடைந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அத்துடன் சர்வதேச நாணயங்களுக்கு எதிராகவும் இலங்கை ரூபாய் பாரிய வீழ்ச்சி அடைந்த முதல் சந்தர்ப்பமும் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## 8 இந்திய மீனவர்கள் நீதிமன்றால் விடுதலை

(கண்டாவளை)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில், கைது செய்யப்பட்ட மேலும் 8 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள், கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நேற்றைய தினம் முன்னிலைப் படுத்தப்பட்டபோது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் குறித்த தமிழக மீனவர்கள் 8 பேரும் கடந்த 26ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-315)

## கொரோனா 10 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 10 கோவிட் மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,407ஆக அதிகரித்துள்ளது. (ம)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10639)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சிற்றுண்டி உணவகத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
(C-3973)

அனுபவம் அவசியமில்லை
பயிற்சி வழங்கப்படும்
சம்பளம் 20'000/-
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். 0777-068-777

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-3942)
0768226240 DHL

யா/கொக்குவில்
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை
பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும்
புதிய நிர்வாகத் தெரிவும் - 2022
இடம் :- பாடசாலையின் பிரதான மண்டபம்
காலம் :- 20.03.2022 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- மாலை 4.00 மணி
பாடசாலையின் நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திரு.N.T.S.சுபநாதன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
(C-3970)

வேலையாட்கள் தேவை
கொடிகாமத்திலுள்ள மொத்த சில்லறை வியாபார நிலையம் ஒன்றுக்கு ஆண் வேலையாள் தேவை.
(C-3971)
தொடர்பு:- 077 969 8914

வேலையாள் தேவை
யாழ்.நகரை அண்டிய 35 வயதுக்குட்பட்ட ஆண் / பெண் Receptionist, சமையல் ஆர்வமுள்ளவர்கள் தேவை.
(C-3969)
077 464 8741

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.